பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 27 திங்கட்கிழமை 13.12.2021 கதிர் 266

## கடற்படையினரால் உயிர்காப்பு பயிற்சி

(இ.கலையமுதன்)

இலங்கைக் கடற்படையினரால் யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்களுக்கு உயிர்காப்பு பயிற்சிப்பாடநெறி அண்மையில் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம், காரைநகரில் ☞ 2

## உதயன் பத்திரிகைக்காக மன்றில் சுமந்திரன் ஆஜர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.13

'உதயன்' பத்திரிகைக்கு எதிராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடுத்த வழக்குகளில் இன்று பத்திரிகை நிறுவனத்துக்காக நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

'உதயன்' பத்திரிகைக்கு எதிராக அமைச்சர் தொடுத்த 3 வழக்குகள் இன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது அமைச்சர் சார் ☞ 2

## சங்கானையில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் நேற்றிரவு 10 மணியளவில் புகுந்த வாள்வெட்டுக் குழு அங்கு பெரும் அட்டகாசம் செய்துள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குறித்த குழு, வீட்டின் கதவுகள், ஓட்டோ, மீன் தொட்டி, தண்ணீர்க் குழாய், கதிரைகள் மற்றும் வேலித் தகரங்கள் என்பவற்றை வாளால் வெட்டி சேதப்படுத்தியுள்ளது. ☞ 2

## 2022 ஜனவரி 18 ஆம் திகதி வரை

# நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்திய கோட்டா

## அடுத்து என்ன நடக்கும்?

**நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நேற்று நள்ளிரவு முதல் இடைநிறுத்தும் விதத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.**

**குறித்த அறிவித்தலின் பிரகாரம் புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 2022 ஜனவரி 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.** ☞ 2



## சிங்கப்பூர் பறந்தார் கோட்டா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூர் சென்றுள்ளார்.

இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக ஜனாதிபதி, சிங்கப்பூர் நோக்கிப் பயணமானார் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி, அவர் அங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் மருத்துவ சிகிச்சையொன்றை பெற்றுக்கொள்ளவுள்ளார் என்று உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் நாடாளுமன்றத்தின் அமர்வை ஜனவரி 18 ஆம் திகதி வரையில் ஒத்திவைத்து விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றையும் ஜனாதிபதி வெளியிட் ☞ 2

## தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து தௌபீக் எம்.பியைத் தூக்கியது மு.கா.

### வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்ததால் வந்த வினை



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் நீக்கப்பட்டுள்ளார்.

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப்பதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் எடுத்திருந்தது. எனினும், கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமைத் தவிர ஏனைய நான்கு எம்.பிக்களும் கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்பட்டு பாதீட்டை ஆதரித்தனர்.

இதையடுத்து அவர்களைக் கட்சியிலிருந்து இடைநிறுத்து ☞ 2

## மன்னார் கடலில் காணாமல்போன மீனவர்களில் ஒருவர் சடலமாக மீட்பு



(மன்னார் நிருபர்)

மன்னார், கோந்தைப்பிட்டிக் கடலில் மூழ்கி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 2 மீனவர்கள் நேற்று மதியம் காணாமல் போன நிலையில் இன்று காலை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்., பருத்தித்துறையைச் சேர்ந்த தர்ஷன் (வயது - 19) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ☞ 2




## கடற்படையினரால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைந்துள்ள எலார கடற்படை முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 16 இளைஞர்கள் அடங்கிய குழுவொன்று கலந்துகொண்டது எனத் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடற்படை சமூகப் பொறுப்புணர்வு முயற்சியின் ஒரு பகுதியாக, கடற்படையின் வடக்கு கடற்படைக் கட்டளையகம் 2021/01 மற்றும் 2021/02 ஆம் ஆண்டுக்கான லைவ் வெண்கலப் பதக்கப் பயிற்சியை நடத்தியது.

மூன்று வார கால உயிர்காப்புப் பயிற்சியில் கலந்துகொண்டு பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் வடக்கு கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் வழங்கி வைத்தனர்.

கடற்படையின் விரைவு மீட்பு மற்றும் நிவாரணப் பிரிவின் உதவியுடன் இலங்கையின் உயிர்காப்பு மற்றும் நார்த் விண்ட் திட்டங்களுடன் இணைந்து கடற்படை இந்த உயிர்காப்புப் பாடத்திட்டத்தை ஏற்பாடு செய்தது.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் இந்த நிகழ்வு, சுகாதார வழிகாட்டுதலுக்கமைய இடம்பெற்றது என கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

## உதயன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிலான சட்டத்தரணிகள் முன்னிலையான போதும் அமைச்சர் மன்றிற்கு சமுகமளித்திருக்கவில்லை.

இரு வழக்குகளில் பத்திரிகை ஆசிரியராக கானமயில்நாதனின் பெயர் குறிக்கப்பட்டிருந்த நிலையில் கானமயில்நாதன் மரணமடைந்தமையினால் அது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்த அபிப்பிராயத்தை மன்றிற்குச் சமர்ப்பிக்க ஜனவரி 10ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இதேநேரம் 3 ஆவது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. முறைப்பாட்டாளரான அமைச்சர் இன்று கொழும்பில் இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றமையால் நீதிமன்றிற்கு சமுகமளிக்க முடியவில்லை என்றும், எனவே வேறு திகதியிடுமாறு அமைச்சர் சார்பு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. வழக்கு மே மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## சங்கானையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தக் கும்பல் ஓட்டோக்குத் தீ மூட்டியுள்ளது. ஓட்டோவை மூடியிருந்த பொலித்தீன் எரிந்துகொண்டிருந்த வேளை வீட்டிலிருந்தவர்கள் அந்தப் பொலித்தீனைக் கீழே இழுத்து விழுத்தினர். இதனால் ஓட்டோ பாரிய பாதிப்புக்கு உள்ளாகவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடாளுமன்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரவு - செலவுத் திட்டக் கூட்டம்தொடர் முடிவடைந்ததும் வழமையாக நாடாளுமன்றம் 3 வாரங்கள் வரை ஒத்தி வைக்கப்படும்.

இதன்படி 2022 ஆம் ஆண்டுக்கான அமர்வை ஜனவரி 11 ஆம் திகதி நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே நேற்று நள்ளிரவு முதல் நாடாளுமன்ற அமர்வு ஜனாதிபதியால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

2022 ஜனவரி 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் என ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய நாளில் சபைக்கு தலைமை தாங்கி, புதிய கூட்டத்தொடரை ஜனாதிபதியே சம்பிரதாயப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கவேண்டும். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையும் இடம்பெறும்.

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உருவாக்கப்படுவதற்கு முன்னர், நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டால் - புதிய அமர்வின் ஆரம்பத்தில் அக்கிராசன உரை இடம்பெறும். இது மீது வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஆனால், தற்போது ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படுவதில்லை. எதிரணிகள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் பிறிதொரு நாளில் அது பற்றி சபை ஒத்தி வைப்புவேளை விவாதம் நடத்தப்படலாம். தற்போதும் ஜனாதிபதியின் உரையை 'அக்கிராசன' உரை என சிலர் அடையாளப்படுத்தினாலும் 'கொள்கை' விளக்க உரை என்பதே சரியானதாகும்.

அரசமைப்பின் 70 (1) உறுப்புரிமைக்கமைய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அவ்வாறு நாடாளுமன்றம் இடைநிறுத்தப்படும் நாளில் இருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத வகையில் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாக வேண்டும். அதற்கான திகதியும் குறித்தொதுக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டாலும் அக்காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிநிலை பாதுகாக்கப்படும். சபாநாயகரும் தொடர்ந்து செயற்படுவார். நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தை மீளமைக்க வேண்டிவரும்.

நாடாளுமன்றத்தில் ஏற்கனவே செயற்பட தெரிவுக்குழுக்கள் புதிய அமர்வின் ஆரம்பத்தில் மறுசீரமைக்கப்படும். நாடாளுமன்ற அமர்வு இடைநிறுத்தப்பட்டாலும் உயர் பதவிகளை அங்கீகரிப்பது தொடர்பான அரசியலமைப்பு பேரவை தொடர்ந்து இயங்கும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காலத்திலும் நாடாளுமன்ற அமர்வுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பூர் பறந்தார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டிருந்தார்.

ஜனாதிபதி சிங்கப்பூருக்கு பயணமாகியுள்ள நிலையில் இன்று மாலை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் கடலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும் அதே இடத்தைச் சேர்ந்த செந்தூரன் (வயது - 28) என்கின்ற இரண்டு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தர் காணாமல்போயுள்ளார். அவரைத் தேடும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று மூன்று மீனவர்கள் கோந்தைப்பிட்டி கடலில் தமது படகைச் செலுத்தி தொழிலுக்குச் செல்ல சரி பார்த்துள்ளனர். இதன்போது மூன்று மீனவர்கள் உள்ளடங்களாக 8 பேர் படகில் இருந்துள்ளனர்.

அவர்கள் படகில் வெளி இணைப்பு இயந்திரத்தை இணைத்துப் படகைச் செலுத்தி பார்த்துள்ளனர்.

படகின் வெளி இணைப்பு இயந்திரம் திடீரென இயங்காத நிலையில் காணப்பட்டுள்ளது.

காற்றின் காரணமாக படகு கடலில் சென்று கொண்டிருந்தது. இதன்போது படகின் முன் அணியத்தில் நின்ற ஒருவர் திடீரென கடலில் வீழ்ந்து கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மற்றைய மீனவர் அவரைக் காப்பாற்ற கடலில் குதித்துள்ளார்.

எனினும், குறித்த மீனவரும் கடல் நீரில் இழுத்துச் செல்லப்பட்டார். ஏனையவர்கள் போராடியும் குறித்த இருவரையும் மீட்க முடியவில்லை.

நீண்ட நேரத்தின் பின்னர் குறித்த படகின் வெளி இணைப்பு இயந்திரம் இயங்கிய நிலையில் இவர்கள் கரை திரும்பி ஏனைய மீனவர்களின் உதவியுடன் காணாமல்போன இருவரையும் தேடியுள்ளனர்.

எனினும், நேற்றிரவு வரை மீனவர்கள் மீட்கப்படவில்லை. இன்று காலை முதல் மீனவர்கள் கடலில் மீண்டும் தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது கோந்தைபிட்டிக் கடலில் இருந்து சற்றுத் தொலைவில் தர்ஷன் (வயது - 19) என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மற்றைய மீனவரை மீனவர்கள் தேடிவருகின்றனர். மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய அமைப்பாளர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வதற்கு தீர்மானிக்கப்பட்டது.
இந்நிலையில் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து தௌபீக் நீக்கப்பட்டுள்ளார்.

அவர் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுகின்றார்.






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்ற ஒத்திவைப்பு ஏன்?

**திடுதிடுப்பென சிங்கப்பூர் பறந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதற்கு முன்னர், நேற்று முதல் வருகின்ற ஜனவரி 18 ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலை விடுத்திருக்கின்றார்.**

**அரசமைப்பின் 70 ஆவது பிரிவின் கீழ் நாடாளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு ஒத்திவைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.**

**ஜனாதிபதியால் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் சபாநாயகர் தொடர்ந்து செயற்படுவார். நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து அப்பதவியில் செயற்பட முடியும்.**

**எனினும் சபை அமர்வுகள் இடம்பெறா. அது மாத்திரமல்ல, நாடாளுமன்றத்தின் முன்னால் இருக்கும் குற்ற விசாரணைப் பிரேரணை தவிர்ந்த ஏனைய பிரேரணைகள், நிகழ்ச்சி நிரல்கள் எல்லாம் செயலிழந்து போகும். அத்தகைய விடயங்கள் நாடாளுமன்றம் உத்தியோகபூர்வமாக மீளக் கூட்டப்பட்டதும் ஒவ்வொன்றாகத் திரும்பவும் ஆரம்பத்தில் இருந்து தொடங்கப்பட வேண்டும்.**

**அதேசமயம், நாடாளுமன்றத்தின் உயர்பதவிகளுக்கான குழு, துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் படி அமைக்கப்பட்ட தெரிவுக் குழுக்கள் தவிர்ந்த ஏனைய நிலையியல் குழுக்கள் யாவும் செயலிழந்துவிடும்.**

**திரும்பவும் நாடாளுமன்றம் கூடும் போது, இக்குழுக்களை மீள நியமித்து, ஆரம்பத்திலிருந்து அவற்றை இயக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.**

**அத்தகைய ஒரு வழியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கே, நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்தார் என நம்பப்படுகின்றது.**

**நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்காக பல நிலையியல் குழுக்கள், உப குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.**

**அவ்வாறு நியமிக்கப்பட்ட சில குழுக்களும் தலைவர்களும் – அவர்கள் ஆளும் தரப்பாக இருந்தாலும் – 'ஸேம் ஸைட் கோல்' அடித்து தங்களுக்கு – அரசுக்கு – தொல்லை தருகின்றனர் என ஜனாதிபதி கருதுகின்றாராம்.**

**நாடாளுமன்ற ஒத்திவைப்பால் அத்தகைய குழுக்கள் யாவும் செயலிழந்துவிட்டன. மீண்டும் நாடாளுமன்றத்தைக் கூட்டும் போது, புதிதாக அக்குழுக்களை, தமக்கு விரும்பியோரை நியமித்து அமைப்பதன் மூலம், அக்குழுக்களினால் இதுநாள் வரை இருந்து வந்த நெருக்கடிகளைச் சமாளிக்கலாம் என அரசுத் தலைமை கருதுகின்றது. அதனால்தான் இந்த நாடாளுமன்ற ஒத்திவைப்பு.**

**பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்றக் குழு (கோப் குழு) தலைவராக அரசுத் தரப்பின் தேசியப்பட்டியல் எம்.பியான சரித்த ஹேரத் இருக்கின்றார். அவர் தலைமையிலான நாடாளுமன்றக் குழுவின் நடவடிக்கைகளினால் முதலீட்டுச் சபை விடயம் கடும் சிக்கலாகி அரசுக்குப் பெரும் நெருக்கடியாக மாறியுள்ளது.**

**பொது நிறுவனங்களின் நிதி தொடர்பான நாடாளுமன்றக் குழுவுக்கு அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமை வகிக்கின்றார். அதனாலும் ஆளும் தரப்புக்கு சிக்கல்கள், நெருக்கடிகள் என்று கூறப்படுகின்றது.**

**பொது நிறுவனங்களின் கணக்குகள் (கோபா) குழுவுக்கு திஸ்ஸ விதாரண தலைமை தாங்குகின்றார். அவர் மூப்பு நிலையில் பெரிதும் தளர்ந்திருக்கின்றமையால், பல பொது நிறுவனங்களின் கணக்குகள் அங்கீகரிக்கப்படாமல் இழுபடுகின்றன. போதாக்குறைக்கு அவரும் சேர்ந்து அரசை விமர்சிக்கின்றார்.**

**இவற்றை எல்லாம் அடியோடு மாற்றியமைக்கும் திட்டத்தில் – ஒரு கல்லில் பல மாங்காய்கள் வீழ்த்தும் முயற்சியாக – நாடாளுமன்ற ஒத்திவைப்பு அறிவிப்பு அரங்கேறியிருக்கின்றது என்பது திண்ணம்.**

# போராடிப் பெறப்பட்ட சமாதானத்துக்கு களங்கம் விளைவிக்கும் விரோதிகள்

## பாதுகாப்புச் செயலர் வேதனை



போராடிப் பெற்ற சமாதானத்துக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நாட்டின் சில விரோத சக்திகள் மற்றும் சமூகவிரோதிகள்செயற்படுகின்றமையுடன் இனங்களுக்கு மத்தியில் அவநம்பிக்கை மற்றும் பிளவு மனப்பாங்கை ஏற்படுத்த முயற்சிக்கின்றன எனப் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

எனவே, இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு எதிராக எழும் பேரபாயங்களைத் தடுப்பதற்காக, சாத்தியமான அச்சுறுத்தல்கள் பற்றிய ஆழமான பகுப்பாய்வுகளை மேற்கொள்வதும், தீங்கு விளைவிக்கும் விளைவுகளுக்கு எதிரான எதிர் நடவடிக்கைகளை முன்கூட்டியே தொடங்குவதும் எமது பாரிய பொறுப்பாகும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நட்பு நாடுகளுக்கு இடையேயான புலனாய்வுப் பகிர்வானது இன்றியமையாத ஒன்றாகும். பயங்கரவாதம் இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்ட நிலையில், மதத் தீவிரவாதத்தை பரப்புவதில் முனைப்பாக உள்ள அரசியல் மத தீவிரமயமாக்கல் மற்றும்அண்மையவன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக மேற்கோள் காட்டிய பாதுகாப்பு செயலாளர், 'நட்பு நாடுகளின் புலனாய்வு அமைப்புகளுக்கு இடையே புலனாய்வு தகவல்களை பகிர்ந்து கொள்வது பேரபாயங்களை எதிர்த்துப் போராடுவதில் ஒரு முக்கிய காரணியாக அமைகிறது' என்றார்.

சமகால சூழலில் உருவாகக்கூடிய சாத்தியமான அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்கு புவிசார் அரசியல் சூழலின் நிலையான மற்றும் தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு அவசியம் என்று அவர் தெளிவுபடுத்தினார்.

கொழும்பிலுள்ள தாமரைத்தடாக மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் இடம்பெற்ற பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலை அதிகாரிகள் கல்லூரியின் 15 ஆவது கற்கை நெறிக்கான பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரின்போது உயிர்த் தியாகம் செய்த படைவீரர்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, மங்கள விளக்கேற்றல்களுடன் விழா ஆரம்பமானது.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பட்டதாரிகள் பிரதம அதிதியிடமிருந்து விருதைப் பெற்றுக்கொண்டமையுடன் விசேட விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வின் போது, பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலை அதிகாரிகள் கல்லூரியின் வருடாந்த சஞ்சிகை அதிதிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இதற்கமைய, முப்படையைச் சேர்ந்த 145 இளம் அதிகாரிகளும், பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேஷியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், ருவாண்டா, சவுதி அரேபியா, செனகல் மற்றும் அமெரிக்கா ஆகிய 10 நட்பு நாடுகளைச் சேர்ந்த 18 அதிகாரிகளும் இதன்போது பட்டம் பெற்றனர்.

'கொமன்டான்ட் ஆய்வுக் கட்டுரையை' சிறந்த முறையில் சமர்ப்பித்தமைக்காக விங் கொமாண்டர் எச்.கே.வை.யு. சோமவன்சவுக்கு 'தங்கப் பேனா' விருதை பிரதம அதிதியான ஜெனரல் குணரத்ன வழங்கினார்.

நாடுகளுக்கிடையிலான சிறந்த புலனாய்வு ஒத்துழைப்பின் அவசியம் தொடர்பாகத் தொடர்ந்து உரையாற்றிய கமால் குணரத்ன –

இன்று பட்டம் பெறும் நேச நாட்டு அதிகாரிகள், புலனாய்வுப் பகிர்வின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை அந்தந்த நாடுகளுக்கு எடுத்துச் செல்வார்கள் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கை.

வெளிநாட்டில் உள்ள புலிகளுக்கு ஆதரவான சக்திகள் மற்றும் அதன் மறைமுக ஆதரவான உள்ளூர் சக்திகள் விடுதலைப் புலிகளின் கோரிக்கையான பிரிவினைவாத சித்தாந்தத்தை கொண்டிருப்பதால் அவைகளால் கணிசமான அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. இதனை நாம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் அண்மையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் மூலம் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவி நிலை அதிகாரிகள் கல்லூரியை அங்கீகரித்து, குறிப்பிடத்தக்க பகுதிகளை உள்ளடக்கிய முதுகலைப் பட்டம் வழங்கியதைக் குறிப்பிட்ட அவர், 'பாடத்திட்டத்தை தொடரும் அதிகாரிகள், உயர் கல்வி அங்கீகாரத்துடன் கூடிய தொழில் வாண்மை விருத்தியால் பெரிதும் பயனடைவார்கள்' – என்றார்.

# டிப்பர் - சைக்கிள் மோதி விபத்து புளியங்குளத்தில் ஒருவர் காயம்



வவுனியா, புளியங்குளம் பகுதியில் டிப்பர் – சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, புளியங்குளம் இராமனூர் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்துக்கு அண்மையில் வீதியோரமாக சைக்கிளில் சென்றவரை அதே வழியில் வந்த டிப்பர் வாகனம் மோதியுள்ளது. இந்த விபத்தில் டிப்பர் வாகனத்தின் கீழ் பகுதியினுள் சைக்கிள் சிக்குண்டதுடன், சைக்கிளின் சாரதி காயங்களுடன் உயிர்தப்பினார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்காவில் சூறாவளி; 100 இற்கு மேற்பட்டோர் சாவு



மத்திய மற்றும் தெற்கு அமெரிக்காவின் சில பகுதிகளில் வெள்ளிக்கிழமை பிற்பகுதி மற்றும் நேற்று பலமான சூறாவளி தாக்கியதில் 100க்கு மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. பெருமளவு கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டமையுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

கென்டக்கியில் மட்டும் 70க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அம்மாகாண ஆளுநர் அண்டி பெஷியர் தெரிவித்துள்ளார்.

சூறாவளி காரணமாக கென்டக்கியில் ஒரு மெழுகுவர்த்தி தொழிற்சாலை, மேற்கு இல்லினாய்ஸில் ஒரு அமேசான் கட்டடம் மற்றும் ஆர்கன்சாஸில் உள்ள ஒரு முதியோர் இல்லம் ஆகியவை இடிந்து விழுந்தன.

மிசோரி, டென்னசி மற்றும் மிசிசிப்பி உட்பட குறைந்தது ஆறு மாகாணங்களில் சூறாவளி பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கென்டக்கியில் மட்டும் இதுவரை 70 பேர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை 100 –ஐ தாண்டும் எனக் கணிக்கப்படுகிறது என மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு கென்டக்கி நகரமான மேபீல்ட் சூறாவளியால் மிக மோசமான அழிவுகளைச் சந்தித்துள்ளது. அங்குள்ள மெழுகுவர்த்தி தொழிற்சாலையில் நேற்று முன்தினம் இரவு 110 தொழிலாளர்கள் பணியில் இருந்தபோது சூறாவளி காரணமாக கட்டடம் இடிந்து விழுந்ததில் சிக்கி பலர் உயிரிழந்துள்ளனர். கட்டடத்துக்குள் இருந்து 40 பேர் மட்டுமே இதுவரை உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள ஏனையவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆர்கன்சாஸில் இரண்டு பேர், டென்னசியில் நான்கு பேர் இல்லினாய்ஸில் ஆறு பேர் மற்றும் மிசோரியில் இரண்டு பேர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கென்டக்கி மாகாணத்தில் உயிரிழந்தவர்களில் 12 சிறுவர்களும் அடங்குகின்றனர் என மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பவ இடத்துக்கு அவசர கால மீட்புப் பணியாளர்கள், தீயணைப்புப் படையினர் அனுப்பப்பட்டு மீட்புப் பணிகள் விரைவாக இடம்பெற்று வருகின்றன.

இடிபாடுகளில் இருந்து தொடர்ச்சியாக சடலங்கள் மீட்கப்பட்டு வரும் நிலையில், அமெரிக்காவை தாக்கிய சூறாவளியால் ஏற்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது

# ஒமிக்ரோன் அவசரநிலை பிரித்தானியாவில் அறிவிப்பு!

## பூஸ்டர் தடுப்பூசி கட்டாயமாக்கப்பட்டது

உலகம் முழுவதும் அதிகரித்து வரும் ஒமிக்ரோன் அச்சங்களுக்கு மத்தியில், பிரித்தானியா அவசர நிலையை அறிவித்து, கொவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயமாக்கியுள்ளது.

WHO அறிக்கையின்படி, ஒமிக்ரோன் வகைகொரோனாவைரஸ்இதுவரைஉலகளவில் 60 நாடுகளில் பரவியுள்ளது. மேலும் அனைத்து நாடுகளிடையேயும் கவலை அலைகளைத் தூண்டியுள்ளது.

இதன் காரணமாக, பல நாடுகள் தங்கள் மக்களுக்கு கொரோனா வைரஸுக்கு எதிரான பூஸ்டர் தடுப்பூசிகளை கட்டாயமாக்க முடிவு செய்துள்ளன.

தற்போது, ஒமிக்ரோன் தொற்று எண்ணிக்கை அதிகரித்துவருவதால், பிரித்தானிய அரசு அவசர நிலையை அறிவிக்க முடிவு செய்துள்ளது மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இந்த வாரம் முதல் கொவிட்-19 தடுப்பூசி பூஸ்டர் டோஸ்களை வழங்குவதற்கான தொடக்கத்தை அறிவித்துள்ளது என்று ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன், நேற்று தொலைக்காட்சியில் அதிகாரப்பூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அப்போது, 'புதிய மாறுபாடான ஒமிக்ரோன் தொற்றுடனான எங்கள் போரில் நாங்கள் இப்போது அவசர நிலையை எதிர்கொள்கிறோம் என்று நான் பயப்படுகிறேன்' என்றார்.

மேலும், யாருக்கும் சந்தேகமே வேண்டாம், ஒமிக்ரோன் அலை வரவிருக்கிறது என்று அவர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், நம் அனைவருக்கும் தேவையான பாதுகாப்பை வழங்க இரண்டு டோஸ் தடுப்பூசி போதுமானதாக இல்லை என்பது இப்போது தெளிவாகிறது. நமது விஞ்ஞானிகள் ஒரு பூஸ்டர் டோஸ் மூலம், நாம் அனைவரும் நமது பாதுகாப்பை மீண்டும் கொண்டு வர முடியும் என்று நம்புகிறார்கள். என்று அவர் கூறினார்.

கொவிட் வகை வைரஸை விட ஒமிக்ரோன் மாறுபாடு மிகவும் வேகமாகப் பரவக்கூடியது என்பதை நிபுணர்கள் ஏற்கனவே அறிந்திருக்கின்றனர் எனவும், மக்கள்தொகையில் ஒமிக்ரோன் அலை அதிகரிக்கப்படாததால், தேசிய சுகாதார சேவை நிரம்பி வழிந்து, நோயாளிகளை மருத்துவமனையில் அனுமதிக்கும் நிலை ஏற்படும் என்றும், இறப்புகள் அதிகரிக்கும் என்றும் பிரதமர் ஜோன்சன் கூறினார்.

பிரித்தானியாவில் கொவிட் -19 எச்சரிக்கை நிலை நான்காக உயர்த்தப்பட்டுள்ளது. பி.பி.சி யின் கூற்றுப்படி, நாட்டில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர்.



# ஆப்கானிஸ்தான் தலைநகரில் 2 குண்டுவெடிப்புச் சம்பவங்கள்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இருவேறு இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் குறைந்தது இரண்டு பேர் கொல்லப்பட்டமையுடன் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என தலிபான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

காபூலின் தாஷ்ட்-இ-பார்ச்சி மாவட்டத்தில் மினிபஸ்ஸில் கடந்த வெள்ளிக்கிழமை வெடிகுண்டு வெடித்ததில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு மூன்று பேர் காயமடைந்தனர் என தலிபான் உள்துறை அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார். இந்த குண்டு வெடிப்பு நடந்த அடுத்த சில நிமிடங்களில் அதே பகுதியில் இடம்பெற்ற மற்றொரு வெடிப்பில் ஒரு பெண் காயமடைந்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்தடுத்து நடந்த இந்த இரட்டை குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு ஐ.எஸ்.பயங்கரவாதிகள் பொறுப் பேற்றுள்ளனர்.

# நியூசிலாந்துக்கு அருகில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

நியூசிலாந்துக்கும் அண்டார்டிகாவிற்கும் இடையில் அமைந்துள்ள மக்வாரி தீவுக்கு அருகே சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தின் அளவு ரிச்டர் அளவுகோலில் 6.5 ஆக பதிவானதாக அமெரிக்க புவியல் ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் 10 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்றும் சேதம் குறித்து உடனடி தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# 21 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் பிரபஞ்ச அழகியாக இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார்






இந்த ஆண்டுக்கான பிரபஞ்ச அழகிப் போட்டி இஸ்ரேலின்எய்லட்நகரில்நடைபெற்றது. இந்தப்போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 80 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். அழகு, அறிவு, உடல்வாகு, சமூகப் பார்வை என பல்வேறு அம்சங்களின் அடிப்படையில், போட்டிகள் நடத்தப்பட்டன.

பராகுவே, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அழகிகள், இந்தியாவைச் சேர்ந்த இளம்நாயகியான ஹர்னாஸ் சாந்துக்கு சவாலாக இருந்தனர். முடிவில், பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஹர்னாஸ் சாந்து,

இந்த பிரபஞ்சத்தின் புதிய அழகியாக அறிவிக்கப்பட்டார். கடந்த ஆண்டு பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வென்ற ஆண்ட்ரியா மெசா, ஹர்னாஸ் சாந்துவுக்கு கிரீடத்தைச் சூட்டினார்.

இதன்மூலம் 21 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வென்றிருக்கிறார். கடைசியாக கடந்த 2000 ஆம் ஆண்டு இந்தியாவைச் சேர்ந்த லாரா தத்தா பிரபஞ்ச அழகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

முக்கிய சுற்றில், இன்றைய அழுத்தமான சூழலை எதிர்கொள்வதில் இளம் பெண்கள் எத்தகைய அணுகுமுறையைக் கையாளவேண்டும் என போட்டியாளர்களிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த ஹர்னாஸ் சாந்து, 'இளைஞர்கள் தங்கள் மீதான நம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டியது அவசியம்' எனத் தெரிவித்தார். தனித்துவம்தான் இந்த வாழ்க்கையை அழகுபடுத்தும் எனவும் அவர் கூறியிருந்தார்.

பிறருடன்நம்மைஒப்பிட்டுநேரத்தைவீணடிக்காமல் உலகளவில்நடைபெறும்விடயங்களைப்பேசவேண்டும் எனவும், உங்களைப் பற்றிப் பேச நீங்கள்தான் முன்வர வேண்டும் எனவும், நீங்கள்தான் உங்களுக்குத் தலைவர் என்பதை மறந்து விடக்கூடாது, நம் பேச்சுதான் நமது எண்ண வடிவம் என்றும், அந்த உயர்ந்த எண்ணத்தின் காரணமாகவே, தாம் இந்த மேடையில் நிற்கிறோம் எனவும் ஹர்னாஸ் சாந்து தெரிவித்த விடயங்கள் நடுவர்களை வெகுவாகக் கவர்ந்தன என அவர்கள் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சாதி, மத ரீதியில் பிளவு ஏற்படுத்துவோரை கண்டறிய உளவு அமைப்பு தேவையென திருமாவளவன் கருத்து



தீவிரவாத நடவடிக்கைகளை கண்டறிய உளவு அமைப்பு உள்ளது போல சாதி, மத ரீதியில் பிளவு ஏற்படுத்துபவர்களைக் கண்டறியும் வகையில் தனியாக உளவுப் புலனாய்வு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

திருவள்ளூரில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய திருமாவளவன், சேலத்தில் அண்ணல் அம்பேத்கர் சிலையை சேதப்படுத்தி, திட்டமிட்டு இரு சமூகத்தினரிடையே பதற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்போர் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் சாதிக் கலவரத்தை தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் தேட சாதிவாத, மதவாத சக்திகள் முயற்சித்து வருகின்றன. இதனைத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்துவது தமிழ்நாட்டின் நலன்களுக்கு உகந்ததாக இருக்கும்.

சாதிச் சண்டைகளையும், மதச் சண்டைகளையும் மூட்டிவிட்டால் இங்கே காலூன்றிவிடலாம் என துடிக்கும் அரசியல் கட்சிகள், மதவாத அமைப்புகளைக் கட்டுப்படுத்துவது அவசியம். இந்தியாவில் மதரீதியில் மோதல் ஏற்படாத மாநிலம் தமிழ்நாடு. இங்கு மத ரீதியில் மோதல் ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருகின்றமையால் முதலமைச்சர் விழிப்புடன் இருந்து அதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தீவிரவாத நடவடிக்கைகளை கண்டறிய உளவு அமைப்பு உள்ளது போல சாதி, மத ரீதியில் பிளவு ஏற்படுத்துபவர்களைக் கண்டறியும் வகையில் தனியாக உளவுப் புலனாய்வு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

## தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட வீரரின் உடல்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடம்




குன்னூர்இராணுவஹெலிக்கொப்டர்விபத்தில்உயிர்பிழைத்திருக்கும் ஒரேயொரு நபரான கப்டன் வருண் சிங், உடலில் எண்பது வீதமான பகுதியில் தீக்காயங்களுடன் பெங்களூருவில் சிகிச்சைபெற்று வருகின்றார். அவரது உடல்நிலை குறித்து இராணுவ மற்றும் மருத்துவமனைத் தரப்பினர் தகவல் வழங்கியுள்ளனர். லெப்டினண்ட் ஜெனரல் அருண் தகவல் வழங்குகையில், குன்னூர் ஹெலிகொப்டர் விபத்தில் தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட வருண்சிங் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாகவே இருக்கின்றது. பெங்களூரு விமானப்படை மருத்துவமனையில் அவருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது, என தெரிவித்துள்ளார்.

தீக்காயங்கள் என்பதால், வருண் சிங்கிற்கு தோல் மாற்று சிகிச்சைகள் நடைபெற்றுவருகின்றன என மருத்துவமனைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக பெங்களூரு விக் டோரியா மருத்துவமனையிலுள்ள மருத்துவக்கல்லூரி மற்றும் ஆய்வுக் கழகத்திலிருந்து மாற்றுத் தோல் பகுதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என மருத்துவமனைத் தகவல்கள் கூறியுள்ளன.





# வெல்லாங்குள சோளச் செய்கையாளர்கள் இம்முறை விளைச்சலின்றி பெரும் நஷ்டம்

திருகோணமலை,கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மஜீத் நகர் வெல்லாங்குள சோளச் செய்கையாளர்கள் இம் முறை விளைச்சலின்றி நஷ்டம் அடைந்துள்ளோம் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

போதிய பசளை இன்றி சோளச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளது என்றும், தங்களது வாழ்வாதாரமாக சோளச் செய்கையை நம்பியே வாழ்ந்து வருகிறோம் எனவும் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பல லட்சம் ரூபா முதலிட்டு , செய்கையில் ஈடுபட்ட போதும் உரிய பயன் கிடைக்கவில்லை. ஒரு கிலோ சோள விதை ரூபா 1,750 ஆனாலும் பல ஏக்கரில் இச் செய்கையினை மேற்கொண்ட போதும் விளைச்சல் கிட்டவில்லை. மேலும் இந்த முறை பசளை இன்மையால் பாரிய பொருளாதார பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளோம் எனவும் சோளச் செய்கையாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். எனவே தங்களுக்கான இழப்பீட்டினை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# மட்டு. கொக்குவிலில் புதிய பொலிஸ் நிலையம்

அரசாங்கத்தின் சௌபாக்கிய தூரநோக்கு திட்டத்திற்கு அமைவாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்ட கொக்குவில் புதிய பொலிஸ் நிலையம் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ர பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எச்.சுதத் மாசிங்கவின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பு பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தினேஷ் கருணாநாயக்கவின் பங்குபற்றலுடன் கிழக்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கமல் சில்வாவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மதத் தலைவர்களின் ஆசியுரையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு கொக்குவில் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கொக்குவில் பொலிஸ் நிலைய கட்டடத்தொகுதி திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் அதிதிகளினால் பொலிஸ் நிலைய வளாகத்தினுள் பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மனித உரிமையும் ஊடக சுதந்திரமும் நிகழ்வு மட்டக்களப்பில்




கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும் தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'மனித உரிமையும் ஊடக சுதந்திரமும்' எனும் தொனிப் பொருளிலான நிகழ்வு நேற்று மாலை மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இ. தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் மற்றும் கொழும்பிலிருந்து வருகை தந்த தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் சிங்கள ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் இணைய வழி ஊடகவியலாளர்கள் தற்காலத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இணைய தொழில்சார் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் பெடிகமகே எடுத்துரைத்தார்.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களையும் ஒன்றிணைத்ததாக இடம்பெற்ற இரண்டாவது அமர்வில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மனித உரிமைகள் தொடர்பாக திறந்த பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளர் ராதா ஞானரெட்ணம் 'மனித உரிமையும் முஸ்லிம் சமூகமும்' எனும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் மொழிபெயர்ப்பாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.ஐ. பாறூக் ஆகியோர் உரையாற்றினர்.

# தாவூது மோதினார் வீதி அபிவிருத்தி

*பிறைந்துரைச்சேனை முஹைதீன் சனசமூக நிலையம் விடுத்த கோரிக்கைக்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான அல்ஹாஜ் நஸீர் அஹமட்டினால் பிறைந்துரைச்சேனை 206-C கிராம சேவகர் பிரிவிலுள்ள தாவூது மோதினார் வீதியை கொங்கிறீட் இடுவதற்காக 15 லட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*இவ்வீதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அல்ஹாஜ் நஸீர் அஹமட் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத், ஏ.எல்.எம்.லியாப்தீன், எம்.ஆப்தீன், எஸ்.ஐ.எம். நிப்ராஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். வேலைத்திட்டங்களை விரைவாகச் செய்து முடிக்க வேண்டுமென்ற நாடாளுமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கமைய நேற்று வீதியினை மட்டப்படுத்தும் வேலைகள் ஆரம்பமாகின.*



காலைக்கதிர் மாலைப்பதிப்பு





# இந்த ஆண்டு போர்முலா-1 கார்பந்தயத்தொடர் முதல் முறையாக மக்ஸ் வெர்ஸ்டபன் சம்பியன்

நடப்பு ஆண்டுக்கான போர்முலா-1 கார்பந்தயத்தொடரின் இறுதிச் சுற்றில் முதலிடம் பிடித்ததன் மூலம் ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் முதல் முறையாக சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

22 சுற்றுகளாக நடைபெறும் போர்முலா-1 தொடரின் நடப்பு ஆண்டின் இறுதிச் சுற்றான அபுதாபி கிராண்ட் பிரிக்ஸ், யாஸ் மெரினா சர்வதேச ஓடுதளத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் 306.183 கிலோ மீற்றர் பந்தயத் தூரத்தைரெட்புல்அணியின்மக்ஸ்வெர்ஸ்டபன், ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்கள் 17.345 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இதற்காக அவருக்கு 26 புள்ளிகள் வழங்கப்பட்டன. அவரை விட 2.256 வினாடிகள் பின்தங்கிப் பந்தயத் தூரத்தைக் கடந்த, மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் இரண்டாவது இடத்தையும் அதற்கான 18 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார். 5.173 வினாடிகள் பின்தங்கிய பெராரி அணியின் வீரரான கார்லோஸ் சய்ன்ஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். அவருக்கு 15 புள்ளிகள் கிடைத்தன.

இதுவரை நடைபெற்று முடிந்த அனைத்துச் சுற்றுகளினதும் முடிவில், ரெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டபன் 10 வெற்றிகள், 395.5 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்தை வென்றார். மெர்சிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லூயிஸ் ஹமில்டன் 8 வெற்றிகளுடனும் 387.5 புள்ளிகளுடனும் இரண்டாவது இடத்தையும், மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வோல்டெரி போட்டஸ், ஒரு வெற்றி, 226 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர்.

# காலி கிளாடியேட்டர்ஸ்டினான போட்டியில் கொழும்பு அணி 41 ஓட்டங்களால் வெற்றி



லங்கா பிறீமியர் லீக் ரி-20 தொடரின் 13ஆவது லீக் போட்டியில், கொழும்பு ஸ்டார்ஸ் அணி 41 ஓட்டங்களால் காலி கிளாடியேட்டர்ஸ் அணியை வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுநடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு ஸ்டார்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது, மழை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட 18 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து, 162 ஓட்டங்களை எடுத்தது. அஞ்சலோமத்தியூஸ் 73 ஓட்டங்களையும் தினேஷ் சந்திமால் 36 ஓட்டங்களையும் பெற்றனர். காலி கிளாடியேட்டர்ஸ் அணியின் சமித் பட்டேல் மற்றும் தனஞ்சய லக்ஷான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 163 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய காலி கிளாடியேட்டர்ஸ் அணி, 16.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் 121 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, கொழும்பு ஸ்டார்ஸ் அணி 41 ஓட்டங் களால் வெற்றிபெற்றது. குசல் மெண்டிஸ் 64 ஓட்டங்களையும் மொஹமட் ஹபீஸ் 16 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். கொழும்பு ஸ்டார்ஸ் அணியின் நவீன் உல் ஹக் 3 விக்கெட்டுக்களையும் ரவி ராம்போல் மற்றும் சீக்குகே பிரசன்ன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக 14 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 4 பவுண்டரிகள் அடங்கலாக 36 ஓட்டங்களைச் சேர்த்த தினேஷ் சந்திமால் தெரிவுசெய்யப்பட்டார்.



# எல்.பி.எல். தொடர் புள்ளிப்பட்டியலில் ஜப்னா கிங்ஸ் அணி முதலிடத்தில்

கண்டி வொரியர்ஸ் அணியை வீழ்த்திய ஜப்னா கிங்ஸ் அணி, எல்.பி.எல். தொடரின் புள்ளிப்பட்டியலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற லங்கா பிரிமியர் லீக்கின் 12 ஆவது போட்டியில் ஜப்னா கிங்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் கண்டி வொரியர்ஸ் அணியை வென்றது.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜப்னா கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்டுக் களமிறங்கிய கண்டி வொரியர்ஸ்அணி 12.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. சரித் அசலங்க ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும்அகமட்சஸாட் 22 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். ஆட்டத்தை உரிய நேரத்துக்கு ஆரம்பிக்க முடியாமையால், அவர்களது இன்னிங்ஸ் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, ஜப்னா கிங்ஸ் அணிக்கு டக்வொர்த் லூயிஸ் முறைப்படி 10 ஓவர்களில் 95 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அடுத்துத்துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜப்னா கிங்ஸ் அணி, 8.4 ஓவர்களிலேயே 3 விக்கட்டுக்களை மட்டும் இழந்து 95 ஓட்டங்களை பெற்று 7 விக்கட்டுக்களினால் வெற்றிபெற்றது. அணித்தலைவர் திசர பெரேரா ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களையும் அவிஸ்க பெர்னான்டோ 23 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்தப் போட்டியின் நாயகனாக சிறப்பாகப் பந்துவீசியிருந்த ஜப்னா கிங்ஸ் அணியின் சொஹைப் மலிக் தெரிவானார்.

இந்த வெற்றியோடு 5 போட்டிகளில் நான்கில் வென்றிருக்கும் ஜப்னா கிங்ஸ் அணி 8 புள்ளிகளோடு புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதன் மூலம் அடுத்த சுற்றுக்கான தனது வாய்ப்பை அந்த அணி உறுதிப்படுத்தியுள்ளது



# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் காயத்தினால் ஹசல்வுட் விலகல்

ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் ஆஷஷ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றது.

தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி பகல்-இரவு ஆட்டமாக வரும் வியாழக்கிழமை அடிலெய்டில் ஆரம்பமாகவுள்ளது.

பிரிஸ்பேன் டெஸ்டின்போது ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹசல்வுட்டுக்கு இடுப்புப் பகுதியில் உபாதை ஏற்பட்டிருந்தது. இதனால் நான்காவது நாள் ஆட்டத்தின்போது அவர் ஆறு ஓவர்கள் மட்டுமே பந்து வீசியிருந்தார். இந்த நிலையில் பிரிஸ்பேன் டெஸ்டில் ஹசல்வுட் விளையாடமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகல் - இரவு டெஸ்ட்களில் ஹசல்வுட்டின் ஆட்டப் பெறுதி சிறப்பானதாகும் என்பதால், அவரது இழப்பு ஆஸ்திரேலிய அணிக்குச் சிக்கலை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.



## எரிவாயு காஸ் அடுப்பு வெடித்து சிகிச்சை பெற்றுவந்த பெண் சாவு

சமையல்எரிவாயுஅடுப்புவெடித்துவிபத்துக்குள்ளானதில் தீக்காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வில்கமுவ, தேவகிரிய, பிதுருவெல்ல பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதனை வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர உறுதிப்படுத்தியுள்ளார்.

குண்டசாலை நாட்டரன்பொத பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கடந்த முதலாம் திகதி எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. குறித்த பெண் குண்டசாலை பகுதியில் குடும்பத்துடன் வாடகை வீடொன்றில் வசித்து வந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று காலை குறித்த பெண் சமைக்கத் தயாராகிக் கொண்டிருந்த போது இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பின்னர் சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 10 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார்.

எரிவாயு விபத்தால் குறித்த பெண் உயிரிழந்துள்ள போதும் விபத்துக்கான சரியான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை எனவும் பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் அரச பகுப்பாய்வாளரிடம் இருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# உங்களால் முடிந்தால் 13 ஐ அமுல்படுத்திக் காட்டுங்கள்!



### அரசுக்கு மனோ சவால்

உங்களால் முடிந்தால் 13 ஆவது திருத்தத்தை அமுல் படுத்திக்காட்டுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அரசாங்கத்துக்கு பகிரங்கமாக சவால் விடுத்துள்ளார்.

தமிழ் பேசும் கட்சிகளின் முக்கியத்துவமிக்க இரண்டாம் கட்ட சந்திப்பு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் இடம் பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்ட ணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ரெலோவின் தலைவர் செல்வம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

ரொலோவின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதற்கு முன்னர் இதுபோன்றதொரு சந்திப்பு சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்தநிலையில் நேற்றைய தினம் இடம்பெற்றிருந்த கலந்துரையாடலில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே தமிழ் முற்போக்குகூட்டணியின் தலைவர் மனோ கணேசன் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், எதிர்வரும் 21ஆம் திகதி முக்கிய ஆவணம் ஒன்றை வெளியிடவுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

# 310 கிலோ எடையுடைய நீலக்கல் கண்டுபிடிப்பு

### உலகில் மிகப் பெரிய நீலக்கல் இலங்கையில்

இரத்தினபுரி – பட்டுகெதர பிரதேசத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள இந்த நீலக்கல்லின் எடை 310 கிலோ கிராம் ஆகும்.இதற்கு 'ஆசியாவின் ராணி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையால் இந்த நீலக்கல்லிலிருந்து ஐந்து மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அவை இரத்தினபுரியிலுள்ள இரத்தினவியல் ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன.

முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் குறித்த நீலக்கல் உலகிலேயே மிகப் பெரிய நீலக்கல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அறிவித்துள்ளது.

அத்தோடு இது மிகவும் அரியவகை நீலக்கல் என்பதோடு, உலகில் எந்தவொரு பகுதியிலும் இதுவரையில் இவ்வாறானதொரு நீலக்கல் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அதனை ஆய்விற்கு உட்படுத்திய இரத்தினவியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ



பம்பரகல தோட்டத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு நோட்டன்பிரிட்ஜ் நோக்கி பயணித்த ஓட்டோ பள்ளத்தில் வீழ்ந்ததில் இருவர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோ பிரதான வீதியில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் கவிழ்ந்து அருகில் உள்ள வீட்டின் முற்றத்தில் நின்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 1.30 மணியளவில் விபத்து இடம்பெற்ற போது ஓட்டோவில் சாரதி உட்பட நால்வர் பயணித்துள்ளனர்.

விபத்தில் ஓட்டோவின் சாரதியும் அதில் பயணித்த ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.நோட்டன்பிரிட்ஜ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும்

### லிந்துலை நகரில் போராட்டம்




தோட்ட நிர்வாகம் மற்றும் கம்பனிகளுக்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க கூட்டு ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தி, தோட்டத் தொழிலாளர்களால் லிந்துலை நகரில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் பங்கேற்று, கூட்டு ஒப்பந்தத்துக்காகக் குரல் எழுப்பினர். லிந்துலை நகரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் டயகம, தலவாக்கலை, கொட்டகலை, லிந்துலை மற்றும் ஏனைய சில தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

இ.தொ.காவின் பிரதித் தலைவர் அனுஷியா சிவராஜா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சக்திவேல், கொட்டகலை, தலவாக்கலை பிரதேச சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட இ.தொ.காவின் பிரதிநிதிகளும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்று, தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற மக்கள், தோட்ட நிர்வாகம் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கெடுபிடிகளைக் கண்டித்ததுடன், தமக்கு உரிய வகையில் சம்பளக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினர். 'கொழுந்தின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அரை நாள் பெயர்தான் விழுகின்றது. ஆயிரம் ரூபா கிடைத்தும் பயன் இல்லை.' என தொழிலாளர்கள் தமது உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தினர்.கூட்டு ஒப்பந்தம் இல்லாததால்தான் தமக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டிய மக்கள், அந்த ஒப்பந்தம் மீண்டும் வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2021இல் வெளியிடப்பெற்றது.